செ.வெ.எண்: 31/2021 நாள்: 22.02.2021

## திருப்பூர் மாவட்டம்

## புதியதாக உருவாக்கப்படவுள்ள துணை வாக்குச்சாவடிகளை இறுதி செய்தல் குறித்த அங்கீகிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், இன்று (22.02.2021) புதியதாக உருவாக்கப்படவுள்ள துணை வாக்குச்சாவடிகளை இறுதி செய்தல் குறித்த அங்கீகிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணைய அறிவுரைகளில், கோவிட்-19 பெருந்தொற்று நோயினை தவிர்க்கும் பொருட்டு, மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தோர், கர்ப்பிணிகள் மற்றும் அனைத்து வாக்காளர்களும் கூட்ட நெரிசலைத் தவிர்த்து சிரமமின்றி எளிதாக விரைந்து வாக்களிக்கும் பொருட்டு 20.01.2021 அன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலினை அடிப்படையாக கொண்டு ஒரு வாக்குச்சாவடிக்கு 1500 வாக்காளர்கள் என இருந்ததை தற்போது 1050 வாக்காளர்களுக்கு மிகாமல் வாக்குச்சாவடிகள் அமைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் உள்ள எட்டு சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள 1050 வாக்காளர்களுக்கு மேலுள்ள வாக்குச்சாவடிகளை வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோரால் தணிக்கை செய்யப்பட்டு, துணை வாக்குச்சாவடிகள் உருவாக்கம், வாக்குச்சாவடிகள் இட மாற்றம் மற்றும் புதிய வாக்குச்சாவடிகள் பெயர் மாற்றம் குறித்த முன்மொழிவுகள் தயார் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளை உள்ளடக்கிய வரைவு துணை வாக்குச்சாவடிகள் பட்டியல் சட்டமன்ற தொகுதி அளவில் வாக்காளர் பதிவு அலுவலர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருடன் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு வரைவு துணை வாக்குச்சாவடிகள் பட்டியல் நகல்கள் வழங்கப்பட்டது. தகுதியின் அடிப்படையில் எதிர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தல் 2021 முன்னிட்டு கீழ்கண்டவாறு துணை வாக்குசாவடிகளை உருவாக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திருப்பூர் மாவட்டம்**

**துணை வாக்குச்சாவடிகள் உருவாக்கம் செய்யப்படும் வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை விபரம்**

| வ. எண் | சட்டமன்ற தொகுதி | தற்போதுள்ள வாக்குச் சாவடிகள் எண்ணிக்கை | 1050 வாக்காளர்களுக்கு மேல் உள்ள வாக்குச்சாவடிகளை பிரித்து புதிதாக துணை வாக்குச்சாவடிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகள் | புதிதாக உருவாக்கப் பட்ட துணை வாக்குச் சாவடிகளையும் சேர்த்து மொத்த வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை | அதே வளாகத்திற்குள் தேர்வு செய்யப்பட்ட வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை | வேறு வளாகத்-திற்கு தேர்வு செய்யப்பட்ட வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 101-தாராபுரம் (தனி) | 298 | 51 | 349 | 46 | 5 | 51 |
| 2 | 102-காங்கயம் | 294 | 78 | 372 | 74 | 4 | 78 |
| 3 | 112-அவினாசி (தனி) | 312 | 89 | 401 | 79 | 10 | 89 |
| 4 | 113-திருப்பூர் (வடக்கு) | 362 | 173 | 535 | 152 | 21 | 173 |
| 5 | 114-திருப்பூர் (தெற்கு) | 240 | 161 | 401 | 110 | 51 | 161 |
| 6 | 115-பல்லடம் | 407 | 141 | 548 | 118 | 23 | 141 |
| 7 | 125-உடுமலைப்பேட்டை | 293 | 87 | 380 | 73 | 14 | 87 |
| 8 | 126-மடத்துக்குளம் | 287 | 70 | 357 | 66 | 4 | 70 |
| | **மொத்தம்** | **2493** | **850** | **3343** | **718** | **132** | **850** |

மேற்கண்டவாறு 1050 வாக்காளர்களுக்கு மேல் உள்ள வாக்குச்சாவடிகளை பிரித்து துணை வாக்குச்சாவடிகள் அமைப்பது தொடர்பாக வாக்காளர் பதிவு அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற முன்மொழிவுகளை இறுதி செய்ய மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருடன் கூட்டம் நடத்தி சென்னை தலைமை தேர்தல் அலுவலர் அவர்கள் மூலமாக இந்திய தேர்தல் ஆணையத்திடம் ஒப்புதலை பெற அனுப்பப்படவுள்ளது என திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர். க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,** தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, தாராபுரம் சார் ஆட்சியர் திரு.பவன்குமார் இ.ஆ.ப., திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திருமதி.வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சாகுல் ஹமீது, தேர்தல் வட்டாட்சியர் திரு.ரவீந்திரன், அரசு அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**